**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.641/2023**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பேச்சி | Caste | : |
| Father 's Name / Husband Name | : சுப்பிரமணி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர். 6 வது எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(05.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது பெரியஆலங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நானும் எதிரிகளும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். நான் கடந்த 11.07.2023 அன்று இரவு சுமார் 7.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு யாரோ சிலர் வந்து பிரச்சினை செய்தார்கள். பின்பு அதில் ஒருவர் என்னை அடித்து காயப்படுத்தினார்கள். இன்னும் மற்றவர்கள் என்னை அடித்தார்கள். இருட்டாக இருந்ததால் யார் என்று தெரியவில்லை. எனது வயோதிகத்தின் காரணமாகவும் என்னை யார் அடித்தார்கள் என்று அடையாளம் தெரியவில்லை. **சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.641/2023**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்பிரமணி | Caste | : |
| Father 's Name / Husband Name | : ஆண்டி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர். 6 வது எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(05.03.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது பெரியஆலங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மாடுமேய்க்கும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். நானும் எதிரிகளும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். நான் கடந்த 11.07.2023 அன்று இரவு சுமார் 7.00 மணியளவில் எங்கள் வீட்டில் இருந்த போது யாரோ சிலர் எங்களிடம் வந்து பிரச்சினை செய்தார்கள். பின்பு அதில் ஒருவர் அ.சா.1ஐ அடித்து காயப்படுத்தினார்கள். இன்னும் மற்றவர்கள் அ.சா.1ஐ அடித்தார்கள். இருட்டாக இருந்ததால் யார் என்று தெரியவில்லை. எங்களது வயோதிகத்தின் காரணமாகவும் அ.சா.1ஐ யார் அடித்தார்கள் என்று அடையாளம் தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை